அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி **2026** தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

சென்னை வேளச்சேரி

தீபம் அறக்கட்டளையின் தொடர் சமுதாயப்பணிகள்

(29 ஆண்டுகளாக சமுக சேவையில்....)

SOCIAL ACTIVITIES OF DEEPAM TRUST

அ

சூரியன்

ஜீவ அறிவு

உ

சந்திரன்

மன அறிவு

திருவருட்பிரகாச வள்ளலார்

ஜோதிமாமலை தருமச்சாலை மற்றும் ஞானசபை

அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத்திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

தீபம் அறக்கட்டளை

நித்ய தீப தருமச்சாலை, எண்: 7/8, புத்தேரிக்கரை தெரு,

வள்ளலார் வீதி, வேளச்சேரி, சென்னை – 600 042.

044-4335 8232 | 9444073635 | www.deepamtrust.org

சமுதாயம் மலர, வளர, உயர, ஒளிர ஓயாது பாடுபடும் சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை நிர்வாகிகள்

திரு.பாலகிருஷ்ணன் M, நிறுவனர்

திரு.வேல்முருகன் M, அறங்காவலர்

திரு. பாரதி V, அறங்காவலர்

திரு.முக்தா சீனிவாசன் S, அறங்காவல

திரு. கணபதி S, அறங்காவலர்

திருமதி.ஜானகி J, அறங்காவலர்

திரு.இராஜசேகர் K, அறங்காவலர்

திரு.சுப்பையா R, அறங்காவலர்

திரு.ராஜாராமன் R, அறங்காவலர்

திரு. மாதவன் M, அறங்காவலர்

திரு. பவானி சங்கர் V, அறங்காவலர்

திரு.முத்துகுமரன் K, தலைவர்

திரு.செந்தில்குமார் K N, துணைத்தலைவர்

திரு.காந்தி R, பொதுச் செயலாளர்

திரு.திருநாவுக்கரசு P, பொருளாளர்

திரு.ஆனந்த் D, நிர்வாகக் குழு

திரு. அரங்கநாதன் P , நிர்வாக குழு

திரு.சக்திவேல் T M, நிர்வாக குழு

திரு. முத்துஜோதி, ஆலோசகர்

திரு.ராமச்சந்திர ராவ் S, தணிக்கையாளர்

சைதை துரைசாமியின்
மனிதநேய அறக்கட்டளை

"அர்ப்பணிப்புடன் கூடிய வாழ்வே அனைத்திலும் சிறந்தது"
"பலன் நோக்கா பணியே மனிதநேயத்திற்கு அழகு"

சைதை துரைசாமி

நிறுவனர் & தலைவர்
மேனாள் மேயர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

- அன்பு
- பாசம்
- நேசம்
- பரிவு
- கருணை
- இரக்கம்
- அர்ப்பணிப்பு வாழ்க்கை
- பிறர் துன்பம் போக்குதல்
- பிறர் தவறை மன்னித்தல்
- பிரதிபலன் பாராமல் உதவி செய்தல்
- தன்னைப் போல் பிறரையும் நினைப்பது
- தேவைப்படுவோரின் தேவையறிந்து தேடிப்போய் உதவி செய்தல்

இவை அனைத்தும் மனிதநேயத்தின் வடிவங்கள்

தேதி: 28.11.2025

<u>வாழ்த்து செய்தி</u>

திரு. அருட்பிரகாச வள்ளலார் (எனும்) இராமலிங்கப் பெருமான் காட்டிய வழியில், சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை எனும் மனிதநேய சமுதாய நலத்தொண்டு நிறுவனம், கடந்த பல வருடங்களாக அறிவுதானத்தையும், அன்னதானத்தையும் தன் இரு கண்களாகக் கொண்டு மக்கள் நல அறப்பணிகளை செய்து வருகிறது. பட்டினியில்லா, நோயில்லா, குற்றமில்லா, வளமான உலகத்தை உருவாக்குவோம் என்ற கொள்கையுடன் முனைந்து செயல்படும் தீபம் அறக்கட்டளையின் நிறுவனரும், தன்னார்வத் தொண்டர்களும் செய்து வரும் சேவைகள் மிகவும் போற்றுதலுக்குரியது. அவர்தம் பணிகள் வள்ளல் பெருமான் காட்டிய வழியில் மென்மேலும் தொடர மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

சைதை சா.துரைசாமி
தலைவர்

மனிதநேய இலவச ஐ.ஏ.எஸ் கல்வியகம்
முன்னாள் மேயர் பெருநகர சென்னை மாநகராட்சி

28, முதல் பிரதான சாலை, நந்தி சிலை அருகில், சி ஐ டி நகர், நந்தனம், சென்னை, தமிழ் நாடு - 600035, தொலைபேசி: 044 - 2435 8373
Email: manidhanaeyam@gmail.com Website: www.saidais.com

15-12-2025

தீபம் அறக்கட்டளைக்கு வாழ்த்து

தானத்திலே சிறந்த தானம் அன்னதானம். பழங்கதை ஒன்று உண்டு. எல்லோருக்கும் அள்ளி அள்ளி கொடுத்த கர்ணன் இறந்த பின்பு நரகத்திற்கு சென்றானாம். சொர்கத்துக்கது செல்லவில்லை. ஆனால். அவனுடைய ஆட்காட்டி விரல் மட்டும் சொர்க்கத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாம். என்ன காரணம் என்று சிந்தனை செய்கையில் எத்தனையோ தானம் செய்த கர்ணன் அன்னதானம் செய்யவில்லை. ஆனால், ஒரு சமயம் அவனிடம் ஒரு யாசகர் பசி எடுக்கிறது சாப்பிட ஏதாவது கொடு எனக் கேட்டபோது அவன் தனது ஆட்காட்டி விரல் மூலமாக அதோ அந்த சத்திரத்தில் அன்னதானம் நடக்கிறது அங்கு செல் என்றானாம். அதனால் அவனது ஆட்காட்டி விரல் மட்டும் சொர்க்த்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாம்.

ஒரு முறை அர்ச்சுனனுக்கு தானம் கொடுப்பதற்காக கிருஷ்ணன் கூறும்போது ஒரு தங்க மலையை கொடுத்தால் நீ எவ்வாறு தானம் செய்வாய் எனக் கேட்டதற்கு அர்சுனன் சொன்னானாம் ஆளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக வெட்டிக் கொடுப்பேன் என்று சொன்னானம. இதே கேள்வியை கர்ணனிடம் கேட்ட போது கர்ணன் சொன்னானாம் மொத்த மலையையும் மொத்தமாக கொடுப்பேன் என்றான். இதுதான் தானம் என்பதற்கு வரையறை.

(Arbitrate not Litigate)

Judge
Lok Adalat - High Court of Madras

Fr. Judge
High Court of Karnataka & Madras

Vice President
Association of Retd Judges of Supreme Court & High Courts of India

Founder
International Peoples Right Committee
Managing Trustee Humanity Religious Committee

Residence :
"SITA NEL", New No.20, Old No. 28,
Krishna Street, (Behind Nagesh Theatre)
T.Nagar, Chennai - 600 017.
Tel : 044 - 42606222
Mobile : +91 98404 99333
Email : tnvjhc@yahoo.co.in

அன்னதானத்திற்கு முக்கியம் கொடுத்து, எவன் ஒருவன் மற்றொருவனுடைய பசியை போக்குகின்றானோ அவனது வாழ்க்கை தேவை என்கின்ற பசிதனை இறைவன் எப்பொழுதும் பூர்த்தி செய்கிறான் என்று சொல்லப்படுகின்றது. அந்த சிந்தனை அடிப்படையிலே அன்னதானம் என்று இந்த கலிகாலத்தில் யோசிக்கின்ற போதெல்லாம் நம் நினைவில் நிற்பவர் வள்ளல் பெருமான் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அன்னதானத்தை அடிப்படையாகக் கொண்டு என்றும் ஒரே சிந்தனையுடன் அன்னதானம் என்கின்ற பணியினை மிகச் சிறப்பாக செய்து வருகின்ற நிறுவனம் தீபம் அறக்கட்டளை.

ஒருமுறை நான் காலை உலா சென்று வீட்டிற்கு திரும்புகையிலே அடையாறு புற்று நோய் மருத்துவமனை வழியாக வந்து கொண்டு இருந்தேன், அந்த காலை நேரத்திலே ஏறத்தாழ 7 – 7.30 மணிக்கு ஒரு வேன் நின்று கொண்டு இருந்தது. அதைச் சுற்றி சுமார் 25 பேர் கையில் பாத்திரம் வைத்துக்கொண்டு நின்று கொண்டு இருந்தனர். என்ன என்று விசாரித்ததில் புற்று நோயாளிகளுக்கு காலையில் கஞ்சி இலவசமாக கொடுப்பதற்காக அவர்களின் உதவியாளர்கள் மூலமாக கஞ்சி வழங்குவதை தங்களது தலையாக கடமைகளில் ஒன்றாக இந்த அறக்கட்டளை செய்து வருகிறது என்பதை கண்டு வியந்து போனேன். வள்ளாலருக்கு அளிக்கும் நன்றி இதைவிட பெரியதாக ஏதும் இருக்க முடியாது. அத்தகைய தீபம் அறக்கட்டளை ஏறத்தாழ 29 ஆண்டுகளாக இந்த புண்ணிய பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவை என்று இயங்கிக் கொண்டு இருக்கின்றது என்று பார்க்கையிலே அவர்கள் வாழ்கின்ற திசைக்கு ஆயிரம் முறை வணங்கி நன்றி செலுத்த வேண்டியது நமது கடமை.

திரு. S. கணபதி, அறங்காவலர், தீபம் அறக்கட்டளை.

தீபத்தின் தூண், தன்னார்வலத் தொண்டர், இதுவரை 50க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்களை தீபத்திற்கு அறிமுகப்படுத்தியவர் அற்புதமான மனிதர். கல்வி உதவித்தொகை வழங்குகிறார். குடும்பத்துடன் சேவையில் ஈடுபடுகிறார், அவர் தம் குடும்பம் வாழ்க!

அதன் முக்கிய நோக்கங்களாக ஏழைகளுக்கு அன்ன தர்மம் செய்தல்; ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்குதல்; இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்; கிராம சேவை செய்தல் மற்றும் இலவச மருத்துவ உதவிகள் செய்தல். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் செய்கின்ற பணிகளின் அட்டவணை எழுத கோடி பக்கங்கள் போதா.

ஒரே வரியில் கூற வேண்டுமானால் வள்ளலாரின் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்ற நல்ல உள்ளங்களின் கூட்டமே அந்த தீபம் அறக்கட்டளை. அவர்களது motto "எல்லாம் செயல் கூடும்!" என்பது மட்டுமல்லாமல் பட்டினியில்லா, நோயில்லா, குற்றமில்லா, வளமான உலகம் உருவாக்குவோம் என்பதே.

வள்ளலார் வழி நடந்து பசியில்லா மனிதன் வயிராற உண்ண வேண்டும் என்று சேவை செய்கின்ற தீபம் அறக்கட்டளை பல்லாண்டு, பல்லாண்டு பல கோடி நூறாண்டு சேவை செய்ய ஈரேழு உலகத்தையும் பசிப் பிணியிலிருந்து காப்பதற்கு அந்த வள்ளலாரே அருள் புரிய வேண்டுமென்று வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

நீதியரசர். தி. நெ. வள்ளிநாயகம்.

முன்னேற்றப் பாதையில் தீபம்!

கல்தோன்றி மண்தோன்றா கால கட்டத்தில் பசியின் கொடுமையைப் பல்வேறு யுகபுருஷர்கள் நன்கு அறிந்துள்ளனர். எண்ணற்ற சித்தர்கள், மகான்கள், ஞானிகள், ரிஷிகள், யோகிகள் போன்றோர் உருவாக்கிய பல்வேறு படைப்புகளிலும், நூல்களிலும், அன்னதான சிறப்பையும், "பசிக்கொடுமை போக்குதலே" உலகில் சிறந்த தொண்டாக போற்றி வந்துள்ளனர். அகத்தியர் உட்பட பதினெண் சித்தர்களும் அன்ன தர்மத்தையும், அதனுடைய சிறப்பையும் பாடல்களாகப் பாடியுள்ளனர். தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளிலும் அன்னதானத்தின் சிறப்பைக் காணலாம். ஆதிகாலம் தொன்றுதொட்டு இறைவனை அடைவதற்கும், பிறவிப் பெருங்கடலில் இருந்து கரையேறுவதற்கும் "அன்னதானம் மிகச் சிறந்த அறப்பணி" என்று பல்வேறு சங்க கால இலக்கியங்கள் பறைசாற்றி வந்துள்ளன. எல்லாம் வல்ல இறைவன் இந்நிலவுலகிற்கு மானிட உருவிலே வருவிக்கவுற்ற திருஅருட்பிரகாச வள்ளலார் 1867ஆம் ஆண்டு வடலூரில் அணையா அடுப்பை மூட்டி, சத்திய தர்மசாலையைத் தொடங்கி சாதி, சமயம், இனம், மொழி, நிறம் போன்றவற்றையெல்லாம் கடந்து, சமரச உணவை அளித்து, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வழிவகை செய்து, இதன்மூலம் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று வாழ முடியும் என்பதை திரு அருட்பா எனும் சாகாக்கல்வி மூலமாக நமக்கு போதித்துள்ளார்.

தொண்டை மண்டலமும், பல்லவ மண்டலமும் இணைந்து எல்லையாக கொண்டு ஒரு காலத்திலே சிறப்புபெற்ற இன்றைய வேலூர் மாவட்டத்தின் எல்லைப்பகுதியும், பனப்பாக்கம் என்கிற ஊருக்கு மிக அருகில் உள்ள சிற்றூர் **சிறுவளையம் கிராமம்.** இந்த கிராமத்தில் வறுமையால் வாடிய தெய்வத்திரு முனுசாமி, கோவிந்தம்மாள் தம்பதியினருக்கு 1964ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் (5.6.1964) மூன்றாவது மகனாக வாய்க்கப்பட்டேன். எனக்கு முன்பாக மூத்தோர்களாகிய திரு.M.வெங்கடேசன், திரு.M.துளசிராமன் ஆகியோரும் எனக்கு பின்பு திரு.M.இரவி என்கிற தம்பியும் பிறந்தனர். என்னுடைய பெற்றோர்களும், குடும்பமும் மிகவும் ஏழ்மையான நிலையில், ஒருவேளை சோற்றுக்கே மிகவும் கஷ்டப்பட்டனர்.

என் தந்தை கிராமத்தில் உள்ள சில வீடுகளில் உணவை யாசகம் செய்து, எங்களுக்கு உணவளித்து விட்டுத்தான் எனது பெற்றோர் சாப்பிடுவது வழக்கம். வறுமை கொடியது, இளமையில் வறுமை மிக மிகக் கொடியது. வறுமை என்றால் என்னவென்று சொல்ல முடியாத வேதனை என்று எனக்கு இளமையிலேயே உணர்த்தப்பட்டது. உண்ண உணவில்லாமல் வாடியதுண்டு; உடுத்த உடையில்லாமல் திரிந்ததுண்டு, வீடு இழந்து தெருவில் வசித்ததுண்டு, கல்லூரி படிப்புக்குக் கூட வழியில்லாமல் ஏங்கியதுண்டு. இப்படி பல வேதனைகளையும், சோதனைகளையும் நான் சந்தித்து வந்ததுண்டு. இதனுடைய தாக்கம் எனக்குள் ஆழமாக வேரூன்றியது.

தயவு. பாலகிருஷ்ணன் மு, நிறுவனர், தீபம் அறக்கட்டளை.

சமுதாயப் பணிகளுக்காக நாளொன்றுக்கு 15 மணி நேரம் உழைப்பவர், 25 ஆண்டு காலம் ஆங்கிலக் கல்வி போதித்த ஆசிரியர், 32 ஆண்டுகள் ஐஐடி மத்திய அரசு ஊழியர், 29 ஆண்டுகளாக சமூகத் தொண்டு செய்பவர், கல்வி உதவி வழங்கும் விழாவில் மனிதநேய அறக்கட்டளை நிறுவனர் சைதை சா. துரைசாமி அவர்களுடன்.

எப்படியாவது கல்லூரிப் படிப்பை படிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் வாய்ப்பில்லை; வழியில்லை; வசதியில்லை. பதினெட்டு வயதில் அதாவது 1981ல் சென்னை அமைந்தகரை ஸ்ரீ ஜோதி பிரிக்ஸ்/அருள்ஜோதி என்ற நிறுவனத்தில் ரூபாய் 300 சம்பளத்தில் குமஸ்தா வேலை பார்த்தேன்.

மனதில் படிப்பின் மீது அடங்காத ஆர்வம். என் படிப்பிற்கு அடித்தளம் அமைத்து இன்று M.Com, M.B.A., படிக்கக் காரணமாக இருந்து நிதி தந்து, தெய்வம் போல் வந்து உதவி செய்தவர்கள் சென்னையைச் சேர்ந்த **ஸ்ரீ சீனிவாசன், ஸ்ரீ சுதர்ஸன்** ஆகியோர்தான். வறுமையில் பிறந்த நான் தற்போது நல்ல நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கும், மத்திய அறிவுசார் நிறுவனமான ஐ.ஐ.டியில் சிறப்பான பணியில் பணிபுரிந்து, மனநிறைவோடு வாழ்வதற்கும், உதவிபுரிந்த மதிப்பிற்குரிய ஐயா சீனிவாசன், ஐயா சுதர்ஸன் போன்ற கருணை உள்ளம் கொண்ட தயவாளர்கள் கொடுத்த கல்விக் கொடையால் தான் என்பது என் நீங்காத நினைவலையில் இருந்து என்றும் மறவாமல் இன்றும் அவர்களை வணங்குகின்றேன்.

சிறுவயதில் என் குடும்பம் வறுமையில் வாடியபோது எனக்கு சேவை செய்யவேண்டும் என்கின்ற எண்ணம் ஆழமாகப் பதிந்தது. தேசப்பிதா காந்தியடிகளின் GO OUT TO SERVE YOUR COUNTRY AND COUNTRYMEN என்கின்ற வாசகம் என்னை சேவைக்குத் தள்ளிவிட்டது. தெருவில் குப்பை தொட்டியில் உணவை தேடிய மனிதனைப் பார்த்து அழுததுண்டு. திருமண ஆடம்பர விருந்துகளில் வீணாகும் உணவை கண்டு வருந்தியதுண்டு. அதனால் சேவைக்கு என்ன செய்யலாம் என்று முடிவெடுத்து முதல் சேவையாக 1997ல் தீபம் கல்வி நிலையம் ஆரம்பித்து, மாணவர்களுக்கு ஆங்கில கல்வியுடன், தேச உணர்வை தூண்டும் ஒழுக்க கல்வியும் போதிக்க ஆரம்பித்தேன். விளைவு, தீபம் மாணவர்களின் எண்ணிக்கை வளர ஆரம்பித்தது. மாணவர்கள் தரும் நிதியாலும், அவர்களுடைய சேவையாலும் 2000ஆம் ஆண்டு முதல் சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதியில் உள்ள குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்குத் தேடிச்சென்று அன்னம்பாலித்தல், உடையளித்தல், அரிசி வழங்குதல், விளையாட்டுப் பொருட்கள் தருதல், விளையாடி மகிழ்தல் போன்ற சிறு சிறு சேவைகளாக விளம்பரமின்றி செய்து வந்தோம்.

ஐ.ஐ.டி.திரு.பாலசுந்தரம் அவர்கள் தந்த வள்ளலார் படமும், மைலாப்பூர்ஆத்மஞான யோகா மைய நிறுவனர் **குருஜி T.S.நாராயணன்** அவர்களின் பேராதரவும், தீபம் அறக்கட்டளை உருவாகக் காரணமாயின. 2000ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை மாணவர்களின் நிதியாலும், பொருளுதவியாலும் சிறு சிறு சேவைப் பணிகள் சிறப்பாக வளர்ந்து 2007ஆம் ஆண்டு திரு அருட்பிரகாச வள்ளல்பெருமான் பெருங்கருணையோடும், பெரம்பூர் அன்ன ஆலயத்தின் ஸ்தாபகர் **தவத்திரு சதீஸ்ராஜ் அடிகளர்** அவர்களின் ஆசியோடு, "தீபம் அறக்கட்டளை" மனிதநேய சமுதாய நலத்தொண்டு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது (அரசு பதிவு எண் 2035/2007).

கடந்த 29 ஆண்டு காலமாக தீபத்தின் பல்வேறு அறப்பணிகளுக்கும், பல்வேறு வகையிலும், நிதியுதவியாகவும், பொருளுதவியாகவும் அளித்து வந்த ஆன்மநேய அன்பர்களின் எண்ணிக்கை சுமார் 2000க்கும் மேல். பல மாதாந்திர தொடர் நன்கொடையாளர்களின் பேருதவியால் தினசரி அன்னம்பாலித்தல் நடைபெறுகிறது. திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் பெருங்கருணையுடனும் தீபம் அறக்கட்டளையின் பல்வேறு மனிதநேய சமுதாய நலப்பணிகளுக்காக என்வாழ்நாளை என்றும் சேவையுடன் வாழ இந்தப் பிறவியில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாக கருதுகிறேன். கடந்த பிறவியில் நான் என்ன புண்ணியம் செய்தேனோ என்று நினைத்துப் பார்க்கின்றேன்.

என்னுடைய இலக்கான கடைசி மூச்சு உள்ளவரை தீபம் ஆங்கில வகுப்புகள் மூலம் மாணவர்களுக்கு அறிவுதானமும், பசியால் வாடும் வறியவர்களுக்கு தொடர்ந்து அன்னதானமும் செய்து கொண்டே இருக்க வேண்டும். **மேலும் சென்னையிலிருந்து 100 கிலோமீட்டருக்குள் மலையும் மலைசார்ந்த அல்லது ஆறும் ஆறு சார்ந்த சிறு கிராமத்தில் நித்ய அன்னதருமச்சாலை கட்டடமும், வள்ளலார் குருகுலமும் மக்கள் நோய் தீர்க்க இயற்க்கை மூலிகைப் பண்ணையும், அருளாளர்கள் தயவால் உருவாக்க வேண்டும் என்பது என் வாழ்வின் குறிக்கோள்**. என்னுடைய அன்பான மனைவி திருமதி புஷ்பா அவர்களும், எனதருமை தவப்புதல்வர்கள் திரு. பா.பிரவின்குமார், திரு.பா.கோகுல்குமார் எனது சேவைப்பணிக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர். மத்திய அரசாங்க வேலையின் மூலமாகவும், தீபம் ஆங்கில கல்வி போதிப்பதன் மூலமாகவும் கிடைக்கும் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை மாதந்தோறும் தருமம் செய்தும் தொண்டு செய்தும் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றேன்.

தீபம்அறக்கட்டளைக்கு கடந்த 29 ஆண்டுகளாக உடல் உழைப்பாகவும், பொருளாகவும், நிதியாகவும், வாரிவழங்கிய அனைத்து ஆன்மநேய சகோதர சகோதரிகளையும், தர்மத்தின் நெஞ்சங்களையும், மாணவச் செல்வங்களையும், தன்னார்வ சேவடிகளையும், நல் இதயங்களையும் தீபம் அறக்கட்டளையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தங்கள் அனைவரின் திருவடி பாதங்களில் காணிக்கையாக்கி, தங்களின் தர்மத்திற்கு தலை வணங்குகிறேன். என்றென்றும் தங்கள் நல்லாதரவை தொடர்ந்து நாடும், உங்களில்ஒருவன்...தீபம் பாலா.

நிறுவனர் பெயர் : முனைவர் திரு. மு. பாலகிருஷ்ணன்
பெற்றோர்கள் : தெய்வத்திரு. S. முனுசாமி & M. கோவிந்தம்மாள்
பிறந்த இடம் : சிறுவளையம் கிராமம், பனப்பாக்கம் வழி,
இராணிபேட்டை மாவட்டம்.
பிறந்த நாள் : 05–06–1964

முகவரி : எண்.3, 3 ஆவது குறுக்குத் தெரு, சாரதி நகர்
வேளச்சேரி, சென்னை – 600042
கல்வி தகுதி : M.Com., MBA.,
தொழில் : Retired Staff, IIT Madras.
கைப்பேசி : 9444073635
மின்னஞ்சல் : deepambala1964@gmail.com

சமுதாயத்தில் தீபத்தின் பங்கு:

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையானது ஓர் அரசு பதிவு பெற்ற, 80G வரி விலக்களிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் முதல்வர் மற்றும் ஆளுநர் திருக்கரங்களால் நேரில் விருது பெற்ற, ஓர் சமுதாய அறத்தொண்டு நிறுவனம். இது தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகர் வேதஸ்ரேணி எனும் வேளச்சேரியில் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த தண்டீஸ்வரம் கோவில் அருகில், 1997ஆம் ஆண்டு முதல் பசியால் வாடுபவர்களது துயர் அறிந்து அவர்களின் பசி தீர்த்தலை சிறு சேவையாகத் தொடங்கி, 2007ஆம் ஆண்டிலிருந்து ஓர் அரசுப் பதிவு பெற்ற ஆன்மநேய அறத்தொண்டு நிறுவனமாகத் தீபம் அறக்கட்டளை திகழ்ந்து வருகிறது. இவ்வறக்கட்டளை கடந்த 29 ஆண்டுகாலமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் தினசரி நித்ய தீபத் தருமச்சாலை வாயிலாகவும், நடமாடும் தருமச்சாலை வாயிலாகவும், தமிழகம் முழுவதும் நிறுவியுள்ள பல்வேறு கிராம தருமச்சாலைகளின் மூலமாகவும், காலையில் பல்லாயிரக்கணக்கானோருக்கு மூலிகை அருட்கஞ்சி வார்த்தல் சேவையையும், தினசரி நித்ய தீப தருமசாலையில் பல நூற்றுக்கணக்கான வறியவர்களுக்கு மூன்று வேளையும் பசியாற்றுவித்தல் சேவையையும், கல்வி உதவி, மருத்துவ உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கும் & பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் வாழ்வாதார உதவி, பேரிடர் காலங்களில் உதவி மற்றும் பல்வேறு சமுக நலப் பணிகளைச் செம்மையாக செய்து வரும் தீபம் அறக்கட்டளை, அனைத்திற்க்கும் முத்தாய்ப்பாக தற்போது செஞ்சி தேவதானம் பேட்டை ஜோதிமாமலை வள்ளலார் சன்மார்க்கப் பண்ணை கிராம சேவை அமைய ஞானசபை மற்றும் தருமச்சாலை திட்டப்பணிகளைச் செய்து வருகிறது.

தொலைநோக்குப் பார்வை:

பட்டினியில்லா... நோயில்லா... குற்றமில்லா... வளமான வையகத்தைப் படைப்போம்!

பணிகள்:

- ✓ பசித்த ஏழைகளுக்கு ஜாதி, மத பேதமின்றி நித்ய அன்னதர்மம் செய்தல்.
- ✓ ஏழை எளிய மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்லூரி கல்வி கட்டணம் வழங்குதல்.
- ✓ இயலாதவர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் செய்தல்.
- ✓ இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- ✓ இளைஞர்களிடையே ஆன்ம நேயத்தை உணரச்செய்தல்.
- ✓ ஆதரவற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி செய்தல்.
- ✓ கிராம சேவை & பேரிடர் காலங்களில் வாழ்வாதார உதவி செய்தல்
- ✓ மாற்றுத்திறனாளிகளுக்கும் & பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் வாழ்வாதார உதவிகள் செய்தல்.

நோக்கம்:

- ✓ தினமும் குறைந்தது ஆயிரம் அன்பர்களுக்கு பசியாற்ற வேண்டும்.
- ✓ வருடந்தோறும் குறைந்தது 100 ஏழை மாணவ மாணவியர்கட்காவது கல்வி உதவி அனைத்து மாவட்டங்களிலும் செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் 10 நபர்களுக்காவது மருத்துவ உதவி அனைத்து மாவட்டங்களிலும் செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் ஏழ்மை நிலையில் உள்ள 100 குடும்பங்களுக்காவது வாழ்வாதார உதவிகள் (அரிசி மற்றும் மளிகை பொருட்கள்) செய்யவேண்டும்.
- ✓ மாதந்தோறும் 100 நபர்களுக்காவது புத்தாடைகள் வழங்கவேண்டும்.
- ✓ ஆன்ம நேயம் வளர தொடர் சத்சங்கம் பயிற்சிகள் நடத்த வேண்டும்.
- ✓ தீப ஒளி திட்டம் மூலம் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் வழங்க வேண்டும்.
- ✓ ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலம் வழங்க கருணை இல்லங்கள் அமைக்க வேண்டும்.

தீபத்தின் தற்போதைய செயல்பாடுகள்:

1. 2000 அன்பர்களுக்கு **நித்ய பசியாற்றுவித்தல்** செய்து வருகிறது.
2. 1450 மாணவ மாணவிகளுக்கு **கல்வி உதவி** செய்து வருகிறது.
3. 10 பேருக்கு **மருத்துவ உதவி** வழங்கி வருகிறது.(டயாலிசிஸ்)
4. 80 பார்வைக்குறைபாடு மற்றும் ஏழ்மையான மாற்றுத்திறனாளிக் குடும்பங்களுக்கு பல வருடங்களாக, மாதந்தோறும் **அரிசி மற்றும் மளிகை** பொருட்கள் வழங்கி வருகிறது.
5. குழந்தைகள் & முதியோர் இல்லங்களுக்கு நேரடியாக சென்று மகிழ்வித்து, உணவு மற்றும் **ஆடைகள்** வழங்கி வருகிறது.
6. கோடை காலங்களில் பொது மக்கள் தாகம் தணிக்க, தண்ணீர் பந்தல் அமைத்து, **நீர் மோர்** வழங்கி வருகிறது.
7. குளிர் காலங்களில் சாலையோரம் ஆதரவற்று உறங்குபவர்களுக்கு, இரவில் **போர்வைகள் மற்றும் உணவு** வழங்கி வருகிறது.
8. கடந்த 153 மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து மாத பூச நாட்களில் **வடலூர் சத்ய தருமச்சாலையில்** நாகை சன்மார்க்க சங்கத்துடன் இணைந்து பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு நாள்முழுவதும் **அன்னதான சேவை** செய்து வருகிறது.
9. இரயிலில் பொருட்கள் விற்பனை செய்யும் பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு **வாழ்வாதார உதவி** செய்து வருகிறது.

தயவு. வெங்கடேஷ் N. தீபம் அறக்கட்டளையின் நிரந்தர சாரதி
சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குழந்தைகள் காப்பகங்கள் & முதியோர் இல்லங்களில் வாரந்தோறும் உணவு வழங்க அரிசி, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் கொண்டு செல்ல வாகனம் வழங்கிய வாழும் வள்ளல். வேளச்சேரி அஞ்சல் அலுவலகம் எதிரில் தினசரி மூலிகை கஞ்சி வழங்கும் சமுதாயப்பணி. வாழ்க தயவு வெங்கடேஷ்!

10. தீபாவளிப் பண்டிகை நாட்களில் குழந்தைகள் & முதியோர் இல்லங்களுக்கு **இனிப்பு, காரவகைகள் மற்றும் பட்டாசு** வழங்கி வருகிறது.
11. வாராந்திர வியாழன் வழிபாடு மற்றும் மாதாந்திர சொற்பொழிவுகள் நடத்தி வருகிறது.
12. ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகளை சுற்றுலா அழைத்துச் சென்று மகிழ்விக்கிறது.
13. இயற்கை சீற்றங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களும், பசியாற்றுவித்தலும் செய்து வருகிறது.
14. மாதந்தோறும் இலவச சித்த மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறது.
15. கொரோனா பெருந்தொற்று காலத்திலும் தருமசாலையின் கதவுகள் மூடாமல் அரசு விதிகளின் படி தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. (கொரோனா காலத்தில் மட்டும் 70 டன் அரிசியில் மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது)
16. தீபநெறி என்னும் சுத்த சன்மார்க்க தமிழ் திங்கள் இதழை விலையில்லா, விளம்பரமில்லா இதழாக இலவசமாக வெளியிட்டு வருகிறது.
17. வாரம் தோறும் வியாழக்கிழமை நித்ய தீப தருமச்சாலையில் 558 வாரங்களாக அகவல் பாராயணம் நிகழ்த்தி வருகிறது.

1997	1997ஆம் ஆண்டு சிறு சேவையாகத் தொடங்கப்பட்டது.
2007	தீபம் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டது (அரசு பதிவு எண் 2035/2007) தினசரி காலை நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு கஞ்சி வார்த்தல்.
2010	கல்வி உதவித் தொகை & அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் உதவி வழங்கப்படுகிறது.
2011	கோடை காலங்களில் நீர் மோர் வழங்கப்படுகிறது.
2012	குளிர் காலங்களில் சாலையோரம் ஆதரவற்றவர்களுக்கு போர்வைகள் வழங்கபடுகின்றன, தானே புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி
2013	வடலூர் சத்ய தருமச்சாலையில் தொடர் பூச அன்னதான சேவை
2015	சென்னை பெரு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி
2018	கஜா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி
2020	கொரோனா காலத்தில் தருமச்சாலையில் தொடர் அன்னதானம்
2021	சென்னை வேளச்சேரியில் 3500 சதுர அடியில் நிரந்தர நித்ய தீப தர்மச்சாலை
2023	செஞ்சி தேவதானம் பேட்டை கிராமம் ஜோதி மாமலையில் 5 ஏக்கரில் வள்ளலார் இல்லம், வள்ளலார் கோட்டம், வள்ளலார் தோட்டம்.

1. <u>அன்னதானம்:</u>

பசியாற்றுவிக்க நினைப்பவன் – **மனிதன்**

பசியாற்றுவிப்பவன் – **மாமனிதன்**

பசியாறியவர்களைக் கண்டு மகிழ்பவன் – **மகான்**

பசியாறியவர்களால் பாராட்டப்படுபவன் – **கடவுள்**

தமிழகத்தில் தீபம் அறக்கட்டளையின் பல்வேறு கிராம தருமச்சாலைகளின் மூலமாக தினசரி காலை பல்லாயிரக்கணக்கானோருக்கு மூலிகை அருட்கஞ்சி வார்த்தல் சேவையும், தினசரி பல நூற்றுக்கணக்கான வறியவர்களுக்குப் பசியாற்றுவித்தல் சேவையும், எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையாலும், தயா உள்ளம் கொண்ட தயவாளர்களின் பெருந்தயவாலும், ஓயாது உழைக்கின்ற ஆடுகின்ற சேவடிகளின் கடுமையான உழைப்பாலும், சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன.

உணவே உயிர்;

உயிரே கடவுள்!

திரு. V.பாரதி, அறங்காவலர், தீபம் அறக்கட்டளை.

கடமையே கண்ணாயினார், சிறந்த சிந்தனையாளர், கடந்த 15 வருடங்களாக அறக்கட்டளையின் அனைத்து சமுதாயப் பணிகளையும் திட்டமிட்டு செய்பவர். வடலூர் வள்ளலார் ஏற்றிய அடுப்பில் 13 வருடங்களாக சத்திய தர்மசாலையில் அன்னதானப் பணிகளை தலைமையேற்று நடத்துபவர்.

1.1. காலையில் கஞ்சி வார்த்தல்:

வேளச்சேரி நித்ய தீபத் தருமச்சாலையைத் தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு கிராம தருமச்சாலைகளின் மூலம் தினசரி நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஆதரவற்ற அன்பு உள்ளங்களுக்கும் மனிதநேய உள்ளன்போடு, நூற்றுக்கணக்கான ஆன்மநேய அன்பர்களின் தயவினோடு எந்த வித பாகுபாடும் இல்லாமல், மூலிகைக் கஞ்சி (புதினா, மிளகு, திப்பிலி, இஞ்சி, சீரகம் கலந்த கஞ்சி) வழங்கப்படுகிறது.

வேளச்சேரி

நித்ய தீப தருமச்சாலை

கொஞ்சிமங்களம்

வங்கனூர்

கேணிப்பட்டு

தேவதானம்பேட்டை

மதுராந்தகம்

சத்திரவாடா

அனந்தபுரம்

ஜவ்வாது மலை

1.2. நடமாடும் அன்ன தருமச்சாலை:

"ஜீவகாருண்யமே மோட்சவீட்டின் திறவுகோல்" என்ற திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான் வாக்கிற்கிணங்க வீதிதோறும், வீடுதோறும் சென்று, அதை உருவாக்கத் துணைபுரியும் சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை கைக்கொண்டுள்ள பல சாதனைகளில், உத்திகளில், செயல்பாடுகளில் நடமாடும் தருமச்சாலையும் ஒன்று.

திரு. ரிஷிகேஷ் வெங்கடேஷ், தன்னார்வலர்.

பள்ளி மாணவர்; தொண்டிற்காகப் பிறந்தவர்; வாரந்தோறும் விடுமுறை நாளில் சாலையோரம் ஆதரவற்று வாழும் மக்களுக்கு டாட்டா ஏஸ் வாகனத்தில் நேரில் சென்று உணவு வழங்கும் தீபம் சேவடி. பாராட்டுக்குரிய பாலகன், வணங்குகிறோம், வாழ்த்துகிறோம்!

வசதியற்ற ஏழைக் குடும்பங்கள் வேளச்சேரி, கல்குட்டை போன்ற இடங்களில் பிளாஸ்டிக் அல்லது தகரத்தால் ஒரு கூரை, கிழிந்த புடவையை கதவாக நினைத்துத் தொங்கவிட்டிருக்கும் வீடுகள். பறவைக்கூடு போல கதவில்லை, கழிப்பறையில்லை. அடுத்த வேளைக்கு உணவுமில்லை. சிறுகுழந்தைகளை வைத்துள்ள குடும்பத்தலைவிகள் நமது நித்யத் தீபத் தருமச்சாலைக்கு வந்து போகமுடியுமா? வீதிகளில் நாம் பார்க்கும் பார்வையற்றோர், கைகால் ஊனமுற்றோர், முதியோர், பசியால் வாடுபவர்கள், இவர்கள் நித்ய தீபத் தருமச்சாலைக்கு வந்து போகமுடியுமா? எனவே "நடமாடும் தருமச்சாலை" ஒன்றை உருவாக்கி தீபம் அறக்கட்டளை கடந்த பல ஆண்டுகளாக, பசித்தவர்களுக்கு டாட்டா ஏஸ் வாகனம் மூலம் அன்னம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. உணவுகளை பொட்டலங்களாக வாகனத்தில் எடுத்துச் சென்று சென்னையில் சாலை ஓரங்களில் இருப்பவர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் அளிக்கப்படுகிறது.

1.3. ஆதரவற்ற இல்லங்களுக்கு உணவு வழங்குதல்:

மாதந்தோறும் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களுடன் சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்வித்து சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது.

1.4. அன்ன பிரசாதம் வழங்குதல்:

வேளச்சேரி பகுதியில் உள்ள கோவில்களுக்குத் திருவிழாக் காலங்கள், கூட்டுவழிபாடு, திருவாசக முற்றோதல் மற்றும் சிறப்பு நாட்களில் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பல வகையான அன்பான அன்ன அருட்பிரசாதம் வழங்கப்படுகிறது.

சன்மார்க்க சங்கங்கள் நடத்தும் கூட்டங்கள், சத்சங்கங்கள் மற்றும் சன்மார்க்க விழாக்களுக்குச் சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது.

சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனு மானந்த மருந்தே – திருவருட்பா

2. கல்வி தீபம் ஏற்றுதல்!

நல்ல மதிப்பெண்கள் பெற்றும் வறுமையினால் தனது உயர்கல்வியைத் தொடரமுடியாதவர்கள், தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள், கிராமப்புற மற்றும் ஏழை எளிய மாணவ–மாணவியர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டயம், பட்டம், பொறியியல் மற்றும் மருத்துவம் பயிலும் ஏழை மாணவ மாணவியருக்குக் கல்வி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சேவை கடந்த 16 ஆண்டுகளில் 1450 மாணவ மாணவியர்களுக்கு ரூ.90 இலட்சம் இலவச கல்வி உதவி வழங்கியுள்ளோம். 12–ம் வகுப்பு முடித்தவர்களுக்கு மட்டும்தான் உதவித்தொகை என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், பள்ளிக்கல்வி பயிலும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் உதவி செய்யப்பட்டு வருகிறது.

செயல்பாடு

கல்விக்கான நிதியுதவி தேவைப்படுவோர் தங்களின் விவரங்களை தபால் வாயிலாகவோ, இணையத்தின் மூலமாகவோ, நேரடியாகவும் கொடுத்து விண்ணப்பிக்க வேண்டும்.

- கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தில் தனது படிப்பு, கல்வி நிறுவனம், முகவரி, தனது கல்வித் தேர்ச்சி, தேவைப்படும் நிதியுதவியின் அளவு, ஆகிய விவரங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தகுதியான விண்ணப்பங்கள் கல்வி உதவிக்குழுவினரால் பகுப்பாய்வு செய்யப்படும்.
- கல்வி உதவிக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ மாணவியர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுகின்றனர். தொலைதூரத்தில் இருந்து வருவோருக்கு உணவு மற்றும் இருவழி போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படுகின்றன.
- நேர்முக தேர்வில் தேர்வான மாணவ மாணவியர்களுக்கு, கல்விக்கட்டணம் காசோலையாக அவர்கள் படிக்கும் கல்லூரி பெயரில் வழங்கப்படுகிறது.

திரு. R. ராஜா ராமன், அறங்காவலர், தீபம் அறக்கட்டளை.

மாதாந்திர தொடர் நன்கொடையாளர்; தீபத்தின் அனைத்து சமுதாயப் பணிகளுக்காகவும் குறிப்பாக மாணவ மாணவிகளின் உயர்கல்விக்காக இதுவரை பல லட்சங்கள் வழங்கிய தர்மப்பிரபு. தீபத்தின் தூண்; போற்றத்தக்கவர்; வாழ்த்துகள், ராஜாராமன் ஐயா!

(உயர்ந்த நோக்கோடு செயல்படுத்தப்பட்டுவரும் இந்தக் கல்வி நிதி உதவி அதற்காக மட்டுமே பயன்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியோடு இருப்பதால் மாணவர்களுக்கான கல்வி நிதியுதவியை நேரடியாக அளிக்காமல், பயிற்சிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் என எந்த தேவைக்காக நிதி கோருகிறார்களோ, அதற்கான நிதியை அவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்தின் பெயரிலேயே காசோலையாக / வரைவோலையாக வழங்கப்படுகிறது).

2.1. புத்தகம், குறிப்பேடு மற்றும் பள்ளிச் சீருடைகள் வழங்குதல்:

வறுமையினால் பள்ளி செல்ல முடியாத குழந்தைகள் மற்றும் குழந்தைகள் காப்பகங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு, புத்தகம், குறிப்பேடு மற்றும் அந்த வருடத்திற்குத் தேவையான பள்ளிச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

2.2. இலவச ஆங்கில வகுப்புகள்:

ஆதரவற்றோர் காப்பகங்களில் உள்ள மாணவ மாணவியர்கள் மற்றும் கிராமங்களில் ஆங்கிலம் கற்கும் ஆர்வத்துடன் இருக்கும் ஏழை மாணவ மாணவியர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் இறை குணமாகும்

கல்வியுஞ் சாகாக் கல்வியு மழியாச்
செல்வமு மளித்த சிவமே சிவமே – திருவருட்பா

2.3. கல்விக் கட்டணம் செலுத்துதல்:

குறைந்த பட்சம் வருடத்திற்கு பெறக்கூடிய நன்கொடைகளை பொறுத்து நூறு ஏழைக்குழந்தைகளின் கல்விக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் தீபம் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக கடந்த 16 ஆண்டுகளில் தொழிற்கல்வி, கலை & அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் பல மேற்படிப்புகள் பயிலும் 1450 மாணவ–மாணவியர்கட்கு இதுவரை ரூ.89,20,114/– கல்விக் கட்டணமாக அவர்கள் பயிலும் கல்லூரியின் பெயரில் காசோலையாக வழங்கப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கல்விதானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் ஆண்டு தோறும் நடைபெறும் இவ்வுயரிய தொண்டில் பங்குபெற தீபம் உங்களை அன்புடன் அழைக்கிறது.

Year	No. of Students Benefited	Educational Help
2025–26	98	Rs.8,59,149
2024–25	83	Rs.6,22,360
2023–24	72	Rs.4,53,950
2022–23	89	Rs.8,79,490
2021–22	53	Rs.3,57,939
2020–21	60	Rs.3,60,041
2019–20	115	Rs.5,72,767
2018–19	104	Rs.6,67,470
2017–18	108	Rs.5,66,012
2016–17	127	Rs.6,25,811
2015–16	87	Rs.3,54,920
2014–15	73	Rs.4,50,000
2013–14	85	Rs.5,11,860
2012–13	115	Rs.6,18,000
2011–12	97	Rs.5,67,365
2010–11	80	Rs.3,75,000

Total Students Benefited: 1450
Total Amount paid: Rs.89,20,114/-

3. தீபத்தின் மருத்துவ சேவைகள்:

"உடற்பிணி யனைத்தையும் உயிர்ப்பிணி யனைத்தையும்
அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே"
"மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே"
"என்றே யென்னினு மிளமையோ டிருக்க
நன்றே தருமொரு ஞானமா மருந்தே"
"மலப்பிணி தவிர்த்தருள் வலந்தரு கின்றதோர்
நலத்தகை யதுவென நாட்டிய மருந்தே"

என்னும் வள்ளல் பெருமானின் அகவல் வரிகளுக்கு ஏற்ப நோயினால் வாடுபவர்களுக்கு தீபம் அறக்கட்டளை பல்வேறு மருத்துவ உதவிகளைச் செய்து வருகின்றது. சிறப்பு மருத்துவத்திற்கும் உதவுகிறது.

மாதந்தோறும் டயலிஸிஸ் சிகிச்சைக்கு காசோலை வழங்கப்படுகிறது & மாதந்தோறும் முதல் ஞாயிறுக்கிழமை சித்த மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

இதர சமூக தொடர் பணிகள்:

"உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெல்லாம் விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க"
தீபம் அறக்கட்டளைஅன்னதானம் செய்வதையே தனது தலையான பணியாகக் கொண்டு செயல்பட்டு வந்தாலும், மனிதனின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான கீழ்க் காணும் ஆன்ம நேயப் பணிகளையும் செய்து வருகிறது.

4. 80 மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் உதவி:

தீபத்தின் ஆன்மநேய அறப்பணிகளில் ஒன்றான பார்வையற்றவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு ஆயுட்கால வாழ்வாதார உதவி கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக செய்யப்பட்டு வருகிறது. அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை அன்று சென்னை வேளச்சேரி தருமச்சாலையில் 80 மாற்றுத் திறனாளி குடும்பங்களுக்கு பிரார்த்தனையுடன் நேரில் வழங்கப்பட்டு வருகின்றன.

பேராசிரியர் Dr. K முத்துகுமரன், தலைவர், தீபம் அறக்கட்டளை.

கல்லூரி பேராசிரியர் கடந்த 15 ஆண்டுகளாக ஏழை மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை வழங்க விண்ணப்பங்களை பெற்று, குழுக்களாக நேர்காணல் நடத்தி, பகுப்பாய்வு செய்து, கல்வி உதவி தொகை திட்டத்தை சீரும் சிறப்புமாக நடத்தி வரும் மாமனிதர், வாழ்த்துகள்!

இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கு பெற்று ஆன்மலாபம் அடைய தங்களின் கமலமலர் பாதம் பணிந்து விண்ணப்பிக்கின்றோம். தாங்கள் மாதந்தோறும் ஒரு பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான 10 கிலோ அரிசி மற்றும் மளிகைப் பொருட்களான துவரம்பருப்பு ஆயில் இதரப் பொருட்களையும் வாரி வழங்கிட வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம்.

ஒருவருக்கு அளிக்கப்படும் அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 1400/- வரை செலவு ஆகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்."தானமும், தவமும் செய்வாராகில் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்ற ஔவையாரின் பொன்வரிகளுக்கு ஏற்பவும் எல்லா உயிர்களும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே என்ற தாயுமானவர் வாக்கிற்கிணங்கவும்,

"மண் திணி ஞாலத்து உயிர் வாழ்வோருக்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என அட்சய பாத்திரம் வைத்திருந்த மணிமேகலையின் தர்ம வரிகளுக்கு ஏற்பவும்,

"எங்கெங்கு இருந்து உயிர் ஏதேது வேண்டினும்
அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ் ஜோதி!"

என்னும் திருஅருட்பிரகாச வள்ளல்பெருமானின் உண்மை அறநெறிக்கு ஏற்ப தங்களை இணைத்துக் கொண்டு தர்மத்தின்படி வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

5. ஆடைகள் உதவி:

மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்று உடுத்த உடை. அந்த வகையில் மானம் காக்க, ஆடை இல்லாதோர்க்கு உதவும் வகையில், நன்கொடையாளர்களிடம் இருந்து புதிய ஆடைகள் மற்றும் நல்ல நிலையில் மற்றவர்கள் பயன்படுத்தும் வகையில் உள்ள பழைய ஆடைகளைப் பெற்று இல்லாதோர்க்கு வழங்கப்படுகின்றன. இதன் ஒருபகுதியாக வருடந்தோறும் மார்கழி மாதத்தில் கடும் குளிரில், சாலையோரத்தில் ஆதரவற்று உறங்குபவர்களுக்கு நள்ளிரவில் நேரில் சென்று நூற்றுக்கணக்கான புதிய போர்வைகள் வழங்கப்படுகின்றன. அப்போது சூடான உணவும் வழங்கபடுகிறது.

6. வாழ்வாதார உதவி!

இரயிலில்பொருட்கள் விற்பனை செய்யும் பார்வையற்றோரை நாம் பார்த்திருப்போம். அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், எழுதுபொருட்கள், நோட்டு, கடலை மிட்டாய், பர்பி போன்ற பல்வேறு பொருட்கள் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதன் விற்பனை வருமானத்தில் அக்குடும்பம் வாழ்கிறது.

7. சொற்பொழிவு (சத்சங்கம்):

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் வேளச்சேரி நித்ய தீபத் தருமச்சாலையில் மாதாந்திர சொற்பொழிவு மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது. இந்நிகழ்வில் ஆன்ம தேர்ச்சி பெற்ற, வாழ்வியல் அனுபவங்களில் சிறந்து விளங்கும் சன்மார்க்கிகளைக் கொண்டு சொற்பொழிவு நடைபெறுகிறது.

"சத்விசாரம்" இறைவனை அடையும் வழியாகும்!

திரு. D. ஆனந்த், நிர்வாகி, தீபம் அறக்கட்டளை.

தீபம் மாணவர், தீபம் சேவதாரி, தீபம் தொடர் நன்கொடையாளர். தன்னுடன் பணிபுரிபவர்களுக்கு அறக்கட்டளையின் சேவைகளை பகிர்ந்து, பல நபர்களை மாதாந்திர நன்கொடையாளர்களாக அறிமுகப்படுத்தியவர். வாழ்க திரு. ஆனந்த்!

